கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை, 2019 - இன் படி புதுச்சேரி பிராந்தியத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (CZMP)

***

செயல் சுருக்கம்

1. முன்னுரை

- இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC), 06.01.2011 அன்று கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையை வெளியிட்டது. இவ்வறிவிக்கையின்படி, கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அனைத்தும், கடலோர நிலப்பகுதிகள் மற்றும் அலைச்செயலால் பாதிக்கப்படும் ஆறுகள், நீர்நிலைகளை ஒட்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காகக் கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின்படி - 2011, புதுச்சேரி அரசு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தைத் தயாரித்து, பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்களை நடத்தி, பெறப்பட்ட கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைப் பரிசீலித்த பின்னர், திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியது. இத்திட்டத்திற்கு 24.10.2018 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது.

- இதனைத் தொடர்ந்து, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 18.01.2019 அன்று கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011 ஆம் ஆண்டு அறிவிக்கைக்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையை வெளியிட்டது.

- 2019 ஆம் ஆண்டு அறிவிக்கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப, 2011 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்களைத் திருத்தியமைக்குமாறு அனைத்து கடலோர மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. இதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அமைச்சகம் 08.06.2019 அன்று வெளியிட்டது.

2. 2019 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் நோக்கங்கள்

- கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் மற்றும் பிற உள்ளூர் மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

- கடலோரப் பகுதிகள், அவற்றின் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பேணுதல்.

- அறிவியல் அடிப்படையிலான நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல்; இயற்கைப் பேரிடர்கள் மற்றும் புவி வெப்பமடைதலால் ஏற்படும் கடல்மட்ட உயர்வு அபாயங்களைக் கருத்தில் கொண்டு திட்டமிடுதல்.

3. கடலோர ஒழுங்குமுறை மண்டலங்கள்

2019 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின்படி, பின்வரும் பகுதிகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன:

- கடற்கரையை ஒட்டிய பகுதியில், உயர் அலைக்கோட்டிலிருந்து (HTL) நிலப்புறமாக 500 மீட்டர் வரையிலான நிலப்பகுதி.

- அலைச்செயலால் பாதிக்கப்படும் ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகளின் கரைகளை ஒட்டிய பகுதியில், உயர் அலைக்கோட்டிலிருந்து நிலப்புறமாக 50 மீட்டர் அல்லது நீர்நிலையின் அகலம், இவற்றில் எது குறைவோ அந்த அளவிலான நிலப்பகுதி.

- உயர் அலைக்கோட்டிற்கும் (HTL) தாழ் அலைக்கோட்டிற்கும் (LTL) இடைப்பட்ட பகுதி (இடைஅலைப் பகுதி).

- கடற்பகுதியில், தாழ் அலைக்கோட்டிலிருந்து கடல்சார் எல்லையான 12 கடல் மைல்கள் வரையிலான நீர்ப்பரப்பு மற்றும் கடலடிப்பகுதி.

- அலைச்செயலால் பாதிக்கப்படும் நீர்நிலைகளில், ஒரு கரையின் தாழ் அலைக்கோட்டிலிருந்து எதிர்க்கரையின் தாழ் அலைக்கோடு வரையிலான நீர்ப்பரப்பு மற்றும் நீரடிப்பகுதி.

4. இடர் கோடு

- அலைச்செயல்பாடுகள், கடல்மட்ட உயர்வு மற்றும் கடற்கரைக் கோட்டில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வரையறுக்கப்படும் கோடு அபாயக் கோடு எனப்படும்.

- இந்திய நிலஅளவைத் துறை மற்றும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ஆகியவை, தேசிய நிலையான கடலோர மேலாண்மை மையத்துடன் (NCSCM) இணைந்து இக்கோட்டை உருவாக்கியுள்ளன.

- கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்ட கடற்கரை அரிப்பு மற்றும் வெள்ளப் பாதிப்புகள் தொடர்பான தரவுகளின் ஒருங்கிணைந்த மதிப்பீட்டின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

- கடலோரப் பகுதிகளில் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை வகுப்பதற்கான முக்கியக் கருவியாக இது விளங்குகிறது.

- காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைப்பு மற்றும் இடர்தணிப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட உதவுகிறது.

- கடலோரக் கட்டமைப்புகள் மற்றும் குடியிருப்புகளைப் பாதுகாப்பதற்கான திட்டமிடலில் வழிகாட்டியாகப் பயன்படுகிறது.

5. புதுச்சேரி பிராந்தியத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

- 2019 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சென்னையிலுள்ள தேசிய நிலையான கடலோர மேலாண்மை மையம் (NCSCM) இப்பணிக்காக நியமிக்கப்பட்டது.

- புதுச்சேரி பிராந்தியத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம், அதன் வரைபடங்கள், வரைவு கடலோர நிலப் பயன்பாட்டு வரைபடங்கள் மற்றும் கடற்கரைக் கோட்டு மாற்ற மதிப்பீட்டு வரைபடங்கள் ஆகியவை செயற்கைக்கோள் தரவுகள் மற்றும் நிலஅளவை வரைபடங்களின் அடிப்படையில், 1:25,000 என்ற அளவீட்டு விகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

6. கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைப்பாடுகள்

கடலோர ஒழுங்குமுறை மண்டலங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

CRZ-IA, CRZ-IB, CRZ-II, CRZ-IIIA, CRZ-IIIB, CRZ-IVA மற்றும் CRZ-IVB.

CRZ-IA – சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள்

கடலோரச் சூழலின் இயற்கைத் தன்மையையும் ஒருமைப்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் புவியமைப்புச் சிறப்பம்சங்கள் இவ்வகையில் அடங்கும்.

- அலையாத்திக் காடுகள் (பரப்பளவு 1,000 சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்கும் இடங்களில், அதனைச் சுற்றியுள்ள 50 மீட்டர் இடைப்பட்ட பாதுகாப்புப் பகுதியும் CRZ-IA ஆகக் கருதப்படும்).
- பவளப்பாறைகள் மற்றும் பவளப்பாறை அமைப்புகள்.
- மணல் குன்றுகள்.
- உயிரியல் செயல்பாடுகள் நிறைந்த சேற்றுப்படிவுப் பகுதிகள்.
- வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம், வனப் பாதுகாப்புச் சட்டம் அல்லது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்படும் தேசியப் பூங்காக்கள், கடல்சார் பூங்காக்கள், சரணாலயங்கள், காப்புக்காடுகள், வனவிலங்கு வாழிடங்கள் மற்றும் பிற பாதுகாக்கப்பட்ட பகுதிகள்.
- உயிர்க்கோளக் காப்பகங்கள்.
- உப்புச் சதுப்பு நிலங்கள்.
- ஆமைகள் முட்டையிடும் இடங்கள்.
- குதிரைவாலி நண்டுகளின் வாழிடங்கள்.
- கடற்புல் படுகைகள்.
- பறவைகள் கூடுகட்டும் இடங்கள்.
- தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அல்லது கட்டமைப்புகள்.
- பாரம்பரியச் சிறப்புமிக்க தளங்கள்.

CRZ-IB – இடைஅலைப் பகுதி

தாழ் அலைக்கோட்டிற்கும் உயர் அலைக்கோட்டிற்கும் இடையில் அமைந்து, அன்றாட அலை ஏற்ற இறக்கங்களால் நீரில் மூழ்கியும் வெளிப்பட்டும் காணப்படும் நிலப்பகுதி இடைஅலைப் பகுதியாகும்.

CRZ-II – நகர்ப்புறக் கடலோரப் பகுதி

கடற்கரைக்கு அருகிலுள்ள அல்லது கடற்கரையை ஒட்டியுள்ள, ஏற்கெனவே வளர்ச்சியடைந்த நிலப்பகுதிகள் இவ்வகையில் அடங்கும். இவை நடைமுறையில் உள்ள நகராட்சி எல்லைகளுக்குள் அல்லது சட்டப்படி நகர்ப்புறமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்க வேண்டும்.

மேலும், இப்பகுதிகளில் மொத்த மனைகளில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான மனைகள் கட்டடங்களைக் கொண்டிருக்க வேண்டும். வடிகால் வசதி, அணுகுசாலைகள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் இருக்க வேண்டும்.

CRZ-III – கிராமப்புறக் கடலோரப் பகுதி

ஒப்பீட்டளவில் குறைந்த அளவு வளர்ச்சியடைந்த அல்லது இயற்கைத் தன்மை மாறாமல் உள்ள கிராமப்புறப் பகுதிகளும், CRZ-II வகைக்குள் வராத பிற பகுதிகளும் CRZ-III ஆக வகைப்படுத்தப்படுகின்றன.

இவை பின்வருமாறு இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

CRZ-IIIA

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2,161-க்கும் அதிகமான மக்கள்தொகை அடர்த்தியைக் கொண்ட CRZ-III பகுதிகள் CRZ-IIIA என வகைப்படுத்தப்படுகின்றன.

இப்பகுதிகளில், இவ்வறிவிக்கையின்படி உரிய கலந்தாலோசனை நடைமுறைகளுடன் தயாரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தால், உயர் அலைக்கோட்டிலிருந்து நிலப்புறமாக 50 மீட்டர் வரையிலான பகுதி புதிய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத் தடைசெய்யப்பட்ட பகுதியாக (NDZ) ஒதுக்கப்படும். அத்தகைய திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலையில், 200 மீட்டர் வரையிலான தடைப் பகுதி தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

CRZ-IIIB

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2,161-க்கும் குறைவான மக்கள்தொகை அடர்த்தியைக் கொண்ட மற்ற CRZ-III பகுதிகள் CRZ-IIIB என வகைப்படுத்தப்படுகின்றன.

இப்பகுதிகளில், உயர் அலைக்கோட்டிலிருந்து நிலப்புறமாக 200 மீட்டர் வரையிலான பகுதி புதிய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத் தடைசெய்யப்பட்ட பகுதியாக (NDZ) ஒதுக்கப்படும்.

அலைச்செயலால் பாதிக்கப்படும் நீர்நிலைகளின் கரையோர CRZ-III பகுதிகளில், உயர் அலைக்கோட்டிலிருந்து நிலப்புறமாக 50 மீட்டர் அல்லது நீர்நிலையின் அகலம், இவற்றில் எது குறைவோ அந்த அளவிலான பகுதியும் புதிய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத் தடைசெய்யப்பட்ட பகுதியாக ஒதுக்கப்படும்.

CRZ-IV – நீர்ப்பரப்புகள்

CRZ-IV என்பது கடலோர நீர்ப்பரப்புகளையும் அவற்றின் அடிப்பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். இது பின்வருமாறு இரு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

CRZ-IVA

கடலில், தாழ் அலைக்கோட்டிலிருந்து கடற்புறமாக 12 கடல் மைல்கள் வரையிலான நீர்ப்பரப்பும் கடலடிப்பகுதியும் CRZ-IVA ஆகும்.

CRZ-IVB

கடலுடன் இணையும் இடத்திலிருந்து அலைச்செயல் பாதிப்பு காணப்படும் எல்லை வரை, அலைச்செயலால் பாதிக்கப்படும் நீர்நிலைகளின் ஒரு கரையின் தாழ் அலைக்கோட்டிலிருந்து எதிர்க்கரையின் தாழ் அலைக்கோடு வரையிலான நீர்ப்பரப்பும் நீரடிப்பகுதியும் CRZ-IVB ஆகும்.

இங்கு அலைச்செயல் பாதிப்பின் எல்லையானது, ஆண்டின் மிகக் குறைந்த நீர்வரத்து காணப்படும் பருவத்தில் உப்புத்தன்மை ஆயிரத்தில் ஐந்து பாகங்கள் (5 ppt) இருக்கும் வரம்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

7. கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் சிறப்புக் கவனம் தேவைப்படும் பகுதிகள்

முக்கியத்துவம் வாய்ந்த கடலோரச் சுற்றுச்சூழல் பகுதிகளைப் பாதுகாப்பதற்கும், உள்ளூர் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், மிகுந்த பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடலோரப் பகுதிகள் (CVCA) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986-இன்கீழ் அடையாளம் காணப்படும் பிற சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இத்தகைய பகுதிகளின் மேலாண்மை, கடலோர வளங்களைச் சார்ந்து வாழும் மீனவர்கள் உள்ளிட்ட உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதுடன், கடலோரச் சுற்றுச்சூழலையும் பேணிப் பாதுகாக்க முடியும்.

8. பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம்

- சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986-இன் தொடர்புடைய விதிமுறைகளின்படி, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதிபதி தலைமையில் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்படும்.

- பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறப்படும் கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் மறுப்புரைகளின் அடிப்படையில் வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தேவைக்கேற்ப திருத்தியமைக்கப்படும். பின்னர், திருத்தியமைக்கப்பட்ட திட்டம் இறுதி ஒப்புதலுக்காக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு அனுப்பப்படும்.

வரைவு ஆவணங்கள் பார்வையிடுதல் மற்றும் கருத்துகள் சமர்ப்பித்தல்

புதுச்சேரி பிராந்தியத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் வரைபடங்கள், திட்ட அறிக்கை, கடலோர நிலப் பயன்பாட்டு வரைபடங்கள் மற்றும் தொடர்புடைய பிற ஆவணங்கள் புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டுக் குழுவின் (PPCC) இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வரும் இணைய முகவரியில் பார்வையிடலாம்: https://dste.py.gov.in/ppcc/CZMP-pdy-2026.html

இவ்வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள், அனைத்துத் துறைகள், நிறுவனங்கள், பொதுமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினர் தங்களது கருத்துகள் அல்லது மறுப்புரைகளை ஆங்கிலம் அல்லது தமிழில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

உறுப்பினர் செயலர்,
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்
3-ஆம் தளம், PHB கட்டடம், அண்ணா நகர்
புதுச்சேரி – 605 005.
மின்னஞ்சல்: ppcc@py.gov.in